விலை ரூ. 10/=

வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

ஈழநாடு

Eelanadu ஈழநாடு

26.08.2020 புதன்கிழமை

நேற்று முடிவின்றி முடிந்தது ஐ.தே.க செயற்குழுக் கூட்டம்

கொழும்பு, ஓக 26

நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டமும் முடிவில்லாமல் முடிவடைந்தது.

ஐ.தே.கவின் தலைமைப் பதவி மற்றும் தேசியப்பட்டியல் நியமனம் குறித்து நேற்றும் எந்த ஒரு முடிவும் எட்டப்படாமல் கூட்டம் முடிந்தது.

கடந்த ஐ.தே.க செயற்குழுக் கூட்டத்தில் கட்சியின் தலைவராக ரணில் தொடர்வார் என்றும், பொருத்தமான இளம் தலை

02

ஆதிக்குடிகள் தமிழர்களா? விவாதிக்க வரட்டும் விக்கி

உதயகம்மன்பில பகிரங்கச் சவால்

கொழும்பு, ஓக 26

இலங்கையின் ஆதிக் குடிகள் தமிழ் மக்களா என்பது குறித்து விவாதிக்க பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் பகிரங்க விவாதத்துக்கு வர வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளார் அமைச்சர் உதய கம்மன்பில.

பாராளுமன்றத்தின் கன்னி அமர்வில் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்த கருத்து தொடர்பிலேயே அமைச்சர் இந்தச் சவாலை விடுத்துள்ளார்.

02

2 இளைஞர்கள் விபத்தில் சாவு!

கொழும்பு, ஓக 26

வெள்ளவாய - தணமல்வில வீதியில், நெலுவயாய சந்தியில் இடம்பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்தனர்.

நேற்று முன் தினம் இரவு வெள்ளவாய - தணமல்வில வீதியில், கித்துல்கோட்ட, நெலுவயாய சந்திக்கு அருகே இடம்பெற்ற விபத்தி லேயே இந்த இரு இளைஞர்களும்

02

அரசமைப்புச் சபைக்கு கோட்டாபயவின் பிரதிநிதியாக மஹிந்தானந்த நியமனம்

கொழும்பு, ஓக 26

அரசமைப்புச் சபைக்கான தமது பிரதிநிதியாக, அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

19ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அமைய, ஆணைக்குழுக்கள் மற்றும் உயர் பதவிகளுக்கான நியமனங்கள் சபாநாயகர் தலைமையிலான 10 பேர் கொண்ட அரசமைப்புச் சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

சபாநாயகர் தலைமையில் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழியாக உறுப்பினர்களாவர். ஜனாதிபதி, பிரதமர் மற்றும்

02

11 கிலோ ஹெரோயின் ரி 56 துப்பாக்கிகள் காலியில் சிக்கின!

கொழும்பு, ஓக 26

சுமார் 100 மில்லியன் ரூபா பெறுமதியான 11 கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

காலி, தல்வத்த மற்றும் ரத்கம பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களி

02

கூட்டமைப்பும் ஆதரவு

மன்னார், ஓக 26

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் வடக்கு கிழக்கில் எதிர்வரும் 30 ஆம் திகதி நினைவு கூரப்பட உள்ள தோடு, அன்றைய தினம் வடக்கு-கிழக்கில் இடம் பெறவுள்ள போராட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பூரண ஒத்துழைப்பை வழங்கும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் 30 ஆம் திகதி சர்வதேச

02

4 இலட்சம் பேர் தொழில் இழப்பு

எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக

கொரோனா வைரஸ் காரணமாக நாட்டில் 4 இலட்சம் பேர் தமது தொழிலை இழந்துள்ளனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பொரளைப் பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாங்கள் ஆட்சிக்கு வந்திருந்தால் கொரோனா வைரஸ்

02

விக்கியின் உரையை எதிர்க்கும் சஷிந்திர!

கொழும்பு, ஓக 26

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரனின் கருத்து தொடர்பில் அடுத்த நாடாளுமன்ற அமர்வில் எதிர்ப்பை வெளிப்படுத்தப் போவதாக இராஜாங்க அமைச்சர் சஷிந்திர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்

02

வீட்டின் முன்பக்கம் இடிந்து கட்டடத் தொழிலாளி சாவு!

சுன்னாகத்தில் பரிதாபச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக 26

வீடு திருத்தப் பணியில் ஈடுபட்டிருந்த கூலித் தொழிலாளி ஒருவர், கூரை சிமெந்துத் தளம் இடிந்து விழுந்ததில் அதற்குள் சிக்குண்டு பரிதாபமாக உயிரிழந்தார்.

02

13 ஆவது திருத்தச் சட்டத்தை இலகுவில் நீக்கிவிடமுடியாது

வாசுதேவ நாணயக்கார சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக 26

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை இலகுவில் இரத்துச் செய்ய முடியாது என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைகளுக்கு தீர்வாகவே இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாகாண சபை தேர்தல் உரிய காலத்தில் இடம் பெற்றிருந்தால் தற்போது மாறுபட்ட கருத்துக்கள்

02

கூட்டமைப்பும்...

காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை வடக்கு-கிழக்கில் 8 மாவட்டங்களை உள்ளடக்கி மாபெரும் கண்டன பேரணி ஒன்றை மேற்கொள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்தப் போராட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பூரண ஒத்துழைப்பை வழங்கும்.

ஒவ்வொரு வருடமும் சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் வடக்கு-கிழக்கில் தமது உறவுகளை நினைவு கூருகின்றனர்.காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகள் கிடைப்பார்கள் என்ற நம் பிக்கையுடன் அவர்கள் போராட்டங் களை முன்னெடுத்து வருகின்றனர்.

ஆனால் இதுவரை அவர்களின் போராட்டத்துக்கு எவ்வித பலனும் கிடைக்கவில்லை.

எனவே காணாமல் ஆக்கப்பட்டவர் கள் தொடர்பில் அரசு உரிய நடவடிக்கை களை முன்னெடுக்க வேண்டும்.

தீர்வு கிடைக்கும் என்று நம்பி உறவுகள் போராட்டங்களை வருடா வருடம் முன்னெடுக்கின்றனர். ஆனால் இது வரை உரிய பலன் கிடைக்கவில்லை.

எனவே நீதிக்காகவும், தமது உறவு களுக்காகவும் எதிர்வரும் 30 ஆம் திகதி வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப்படு கின்ற போராட்டத்திற்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பு பூரண ஒத்துழைப்பை வழங்கும்-என்றார்.

ஆதிக்குடிகள்...

"எனது தாய் மொழியிலும், உலகில் உயிர்வாழும் மூத்த மொழிகளில் ஒன்றும், இந்நாட்டின் முதல் சுதேச குடிமக்களின் மொழியிலும் நான் எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்" என சி.வி.விக்னேஸ்வரன் தனது பாராளுமன்ற உரையில் தெரிவித்து, சபாநாயகருக்கு வாழ்த்து கூறியிருந்தார்.

இந்நிலையில், இலங்கையின் ஆதிக் குடிகள் தமிழ் மக்களா என்பது குறித்து தன்னுடன் விவாதிக்க வருமாறு உதய கம்மன்பில அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

விக்னேஸ்வரனின் கருத்துக்கு வெறுமனே எதிர்ப்புத் தெரிவிப்பதால் மாத்திரம் அது பொய்யாக அமையாது. பொய் என நிரூபிப்பதன் மூலம், அது பொய்யாக அமையும். அவர் கூறுவது, அப்பட்டமான பொய் என நிரூபிக்க நான் தயார். ஆகவே, இலங்கையின் ஆதிக் குடிகள் தமிழ் மக்களா என்பது குறித்து என்னுடன் விவாதிக்க வருமாறு பாராளுமன்ற உறுப்பினர் சி.வி விக்னேஸ் வரனுக்கு சவால் விடுக்கின்றேன்.

நாட்டின் நல்வாய்ப்பாக சி.வி விக் னேஸ்வரனின் கடும்போக்குவாதத்தை வடக்கு மக்கள் நிராகரித்துள்ளனர். அவருக்கு யாழ். மக்கள் 21,554 விருப்பு வாக்குகளையே அளித்தனர். பிரிவினைவாதத்துக்குப் பதிலாக, வடக்கு அபிவிருத்தியில் அரசுடன் கைகோர்த்த அங்கஜன் இராமநாதனுக்கு 36,365 விருப்பு வாக்குகளையும், டக்ளஸ் தேவானந்தாவுக்கு 32,146 விருப்பு வாக்குகளையும் வடக்கு மக்கள் வழங்கியுள்ளனர். ஆகவே, தமிழ் பிரிவினைவாதத்துடன் தொடர்ந்தும் பயணிப்பதற்கு வடக்கு மக்கள் தயாரில்லை என்பது தெளிவாகியுள்ளது.

விக்னேஸ்வரன் ஆபத்தான அறிக்கை கள் மற்றும் பொய்களைக் கூறி தமிழ் மக்களை வெல்ல முயற்சிக்கிறார். ஆனால் மக்கள் அவற்றை ஏற்கத் தயாராக இல்லை.

உலகின் மிகப் பழமையான மொழி தமிழ் என்று அவர் கூறுகிறார். ஆனால் தமிழ் கி.மு மூன்றாம் நூற்றாண்டில் தோன்றியது. சீன, அரபு, கிரேக்கம் மற்றும் பாஸ்க் போன்ற மொழிகள் மிகவும் பழமையானவை.

இலங்கையில் தமிழர்கள் பூர்வீகக் குடிகள் என்பதற்கான தொல்பொருள் அல்லது வரலாற்று சான்றுகள் எதுவும் இல்லை. டச்சுக் காலத்தில் எழுதப்பட்ட யாழ்ப்பாண வைபமலைதான் தமிழர் களிடமுள்ள வரலாற்று சான்று-என்றார்.

அரசமைப்புச் சபைக்கு...

எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் தமது பிரதிநிதியாக தலா ஒருவரை நியமிக்கவேண்டும். சிறு கட்சிகளின் பிரதிநிதியாக ஒருவர் நியமிக்கப்படுவார்.

அத்துடன், அரசமைப்புச் சபைக்கு சிவில் சமூகப் பிரதிநிதிகளாக மூவர் நியமிக்கப்படுவார்கள். அவர்களுக்கான ஒப்புதலை ஜனாதிபதி வழங்கவேண்டும்.

இந்த நிலையில் அரசமைப்புச் சபைக் கான தமது பிரதிநிதியாக அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார். அவரது நியமனத்தை உறுதி செய்து ஜனாதிபதியால் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

2 இளைஞர்கள்...

உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளை ஞர்களும் எதிரே வந்த கப் வாகனத்துடன் மோதியதில் விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த செவணகல, கலுதியகமவைச் சேர்ந்த 19 வயதான, ஜி.ஜி. இந்திக சாமல் சத்துரங்க மற்றும் மோட்டார் சைக்கிளின் பின்னாலிருந்து வந்த 17 வயதான கசுன் ஸ்ரீமால் முனசிங்க ஆகியோரே மரணமடைந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் கப் வாகனத்தின் சாரதியைப்பொலிஸார்கைதுசெய்துள்ளனர்.

13ஆவது...

தோற்றம் பெற்றிருக்காது.

மாகாண சபை தேர்தல் காலவரையறை யின்றி பிற்போடப்பட்டுள்ளமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பொறுப்பு கூற வேண்டும்-என்றார்.

வீட்டின் முன்பக்கம்...

சுன்னாகம், அம்பனைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

நவாலி கலையரசி லேனைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான அல்ரர் போல் (வயது-42) என்பவரே உயிரிழந் தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை யில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணை களை சுனனாகம் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

நேற்று...

வரைக் கண்டறிந்து தலைமையை ஒப்படைப்பதெனவும் முடிவாகியிருந்தது.

புதிய கட்சித் தலைவரை நியமிப்பது தொடர்பான நெருக்கடி தீர்க்கப்படும் வரை தேசியப் பட்டியலில் ஒரு உறுப்பினரை பரிந்துரைக்கவேண்டாம் என்றும் ரணில் முடிவு செய்திருந்தார்.

முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தன்னிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைகளைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியை வழிநடத்தத் தான் தயார் என அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

விக்கியின்...

விக்னேஸ்வரன், நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

9ஆவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்வில் விக்னேஸ்வரன் ஆற்றிய உரை யானது இந்த நாட்டிலுள்ளவர்களுக் கானது அல்ல. மாறாக, புலம்பெயர்ந்துள் ளோருக்கு ஆற்றிய உரையாகும். ஆகவே, அது தொடர்பாகக் குழப்பமடையத் தேவையில்லை.

மேலும், விக்னேஸ்வரன் கூறியது போன்று வட, கிழக்கு மக்களுக்கும் தேவையானது இதுவல்ல. ஆகவே, விக் னேஸ்வரனின் கருத்து தொடர்பில் அடுத்த நாடாளுமன்ற அமர்வில் எதிர்ப்பை வெளிப்படுத்த எதிர்பார்த்துள் ளோம் என்றும் அவர் மேலும் கூறினார்.

இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய மேலும் 12 பேருக்குக் கொரோனா

இலங்கையில் மேலும் 12 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய 12 பேருக்கே இவ்வாறு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண் ணிக்கை 2,971 ஆக அதகரித்துள்ளது.

கொரோனாத் தொற்றுக்குள்ளான 143 பேர் தொடர்ந்தும் நாடு முழுவதும் உள்ள 09 வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, 62 பேர் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் வைத்தியசாலைகளில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 12 பேர் உயிரிழந்தும் 2,816 பேர் குணமடைந்தும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அடுத்த 2 ஆண்டுகளுக்குப் போதுமான வாகனங்கள் இலங்கையில் கையிருப்பில்!

கொழும்பு, ஓக 26

அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குப் போதுமான வாகனங்கள் இலங்கை தற்போது கையிருப்பில் உள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர்பி.பி. ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதியை மட்டுமே அரசு தற்போது நிறுத்தி வைத்துள்ளது எனவும் அவர் கூறினார்.

2019 வரை ஆண்டுக்கு 1000 முதல் 1200 மில்லியன் அமெரிக்க டொலர் செலவீட்டில் வாகனங்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டன. இந்த வாகனங்கள் கப்பல்கள் வழியாக இலங்கைக்குக் கொண்டு வரப்படுகின்றன. 2015 முதல் 2019 வரை இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் அடுத்த 2 ½ ஆண்டுகளுக்கு போதுமானவை. எந்தவொரு நபரும் தற்போது இலங்கையில் ஒரு புதிய வாகனத்தை வாங்கலாம். வாகன விலை அதிகரிப்பு முற்றிலும் மாறுபட்ட பிரச்சினை எனவும் அவர் கூறினார்.

மத்திய வங்கி அறிக்கையின்படி, 2020 -ஜூன் மாதத்தில் தனியார் வாகனங்களின் இறக்குமதிக்கு 9.2 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட்டது. இது 2019 ஜூன் மாதத்தில் செய்யப்பட்ட செலவினங்களுடன் (48.1 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) ஒப்பிடும்போது 80.9மூ வீழ்ச்சியாகும்.

2020 முதல் 6 மாதங்களில் தனியார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான செலவீனம் 15.7மூ குறைந்துள்ளது எனவும் ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸுடன் இந்தியத் தூதுவர் சந்திப்பு

கொழும்பு, ஓக 26

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளு மன்ற உறுப்பினர்கள் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பக்லேயை சந்தித்து கலந்துரையாடினர்.

கொழும்பிலுள்ள இந்திய தூதரகத் தில் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் இடம்பெற்ற சந்திப்பில் சமகால அரசி யல் நிலவரம் மற்றும் அபிவிருத்தி நட வடிக்கைகள் தொடர்பில் கலந்துரையா டப்பட்டது.

புதிய அரசு பதவியேற்றுள்ள நிலை யில் 19ஆவது அரசமைப்பு திருத்தத்தை நீக்குதல் மற்றும் புதிய அரசமைப்பை தயாரித்தல் போன்ற விடயங்கள் குறித்து ஜனாதிபதி கோட்டாபய 9ஆவது நாடாளுமன்றத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்து ஆற்றிய உரையில் குறிப்பிட்ட அம்சங்கள் தொடர்பில் ஆளுங்கட்சி, எதிர்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும், அரசியல் பிரமுகர்கள் சிலரும் பல்வேறு கருத்துக்களை வெளிப்படையாகவும், பகிரங்கமாகவும் கூறிவருவது பற்றி அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டன.

அத்துடன் நாட்டில் வாழும் சகல சமூகத்தினரும் பயனடையக் கூடிய வகை யில் இந்திய அரசால் வழங்கப்படும் வீட மைப்பு திட்டங்களை முன்னெடுக்கப்படு வது சாலச் சிறந்ததாக இருக்குமென்றும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலை வர் ரவூப் ஹக்கீமுடன் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர்களான எம்.எஸ்.தௌபீக், ஹாபிஸ் நஸீர் அஹமத், பைசல் காசிம் ஆகியோரும் இதில் பங்குபற்றினர்.

இந்திய பிரதித் தூதுவர் வினோத் கே.ஜேக்கப், தூதரகத்தின் அரசியல் மற்றும் கொன்சூலர் பிரிவுக்கு பொறுப் பான பானு பிரகாஷ் ஆகியோரும் உடனிருந்தனர்.

11 கிலோ...

லேயே இந்த ஹெரோயின் கைப்பற்றப் பட்டுள்ளதாகவும், இதன்போது, ரி-56 ரக துப்பாக்கிகள் இரண்டும் கைத் துப்பாக்கிகள் இரண்டும் கைப்பற்றப் பட்டுள்ளதாகவும், குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

4 இலட்சம்...

நெருக்கடியால் வேலையிழந்த நான்கு இலட்சம் பேருக்கும் புதிய தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொடுக்க நட வடிக்கை எடுத்திருப்போம். எவ்வாறாயி னும் தற்போதைய அரசு தொழில் இழந்த வர்களுக்காக புதிய தொழில் வாய்ப்பு களை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின் றேன்-என அவர் தெரிவித்துள்ளார்.

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
26.08.2020 புதன்கிழமை
சார்வரி, ஆவணி 10

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 492 7805

புதிய அரசியல் யாப்பு எதிர்ப்பு இயக்கமே தேவை!

அரசாங்கம் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் விவாதிக்க முற்படுகின்றது. இந்த இடத்தில் தமிழர் தலைமைகள் என்ன செய்யப் போகின்றனர்? அமைதியாக இருக்கப் போகின்றனரா அல்லது எதிர்ப்பை வெளிப்படுத்தப் போகின்றனரா? முன்னைய அரசாங்கமும் ஓர் அரசியல் யாப்பு தொடர்பில் விவாதித்தது. அதில் தமிழ் மக்களுக்கு நன்மையிருப்பதான தோற்றமொன்றும் காண்பிக்கப்பட்டது. கூட்டமைப்பு அதனுடன் ஐந்து வருடங்களை வீணாக்கியது - இறுதியில் எதுவும் நடைபெறவில்லை. ஆனால், இந்த அரசாங்கத்தின் பிரச்னை வேறு. இந்த அரசாங்கம் ஒரு புதிய அரசியல் யாப்பை கொண்டு வருவதற்கான ஆற்றலை கொண்டிருக்கின்றது. மேலும் ஒரு பொதுசன வாக்கெடுப்பிற்கு சென்றாலும் அதில் வெற்றிபெறக் கூடிய ஆற்றலை கொண்டிருக்கின்றது. 59 வீதமான சிங்கள மக்களின் ஆதரவையும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தையும் கொண்டிருக்கும் அரசாங்கம் எதனையும் செய்யலாம்.

அவர்களின் விருப்பங்களுக்கு கடிவாளமிருக்கப் போவதில்லை. ஏனெனில், இந்த அரசாங்கம் கொண்டுவர முயற்சிக்கும் அரசியல் யாப்பு முற்றிலும் தமிழ் மக்களுக்கு எதிரான ஒன்று. ஐக்கிய தேசியக் கட்சி முற்றிலும் செயலிழந்து போயிருக்கும் நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியால் கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்பை, ஐக்கிய தேசியக் கட்சி கையெழுத்திட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாகக் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாதொழிப்பதற்கான முனைப்பு நிச்சயம் இந்த அரசாங்கத்திடம் இருக்கும். இதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சியால் கொண்டுவரப்பட்ட விடயங்களை இல்லாதொழித்து மெதமுல்ல ராஜபக்ஷக்களின் அரசியல் யாப்பு என்னும் ஒரு புதிய வரலாற்றை படைப்பதில் அவர்கள் பெருவிருப்புக் கொண்டிருப்பர். தமிழ் மக்கள் தொடர்பில் எந்தவொரு கரிசனையையும் வெளிப்படுத்த வேண்டிய அவசியம் தங்களுக்கில்லையென்று வெளிப்படையாகவே கூறும் அரசாங்கம் மேலும், தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு அபிவிருத்தியை தீர்வாகக் காட்டும் ஓர் அரசாங்கம் கொண்டுவரும் அரசியல் யாப்பை தமிழர்கள் ஒட்டுமொத்தமாக நிராகரிக்க வேண்டும். இது தொடர்பில் தமிழ் தலைமைகள் இப்போதே மக்களை விழிப்பூட்ட வேண்டும்.

இந்த அரசாங்கம் புதிய அரசியல் யாப்புப் பற்றிப் பேசுவது 13 இன் ஊடாக, அரசியல் யாப்பில் ஓரளவு உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் அதிகாரப் பகிர்விற்கான ஏற்பாட்டைக் கூட இல்லாமலாக்கும் நோக்கம் கொண்டது. இவ்வாறானதோர் அரசியல் யாப்பை எதிர்ப்பதற்கான நேச சக்திகளையும் தமிழ் தலைமைகள் இனம் காண வேண்டும். மலையக தலைமைகள், முஸ்லிம் தலைமைகள் ஆகியவற்றுடனும் உரையாடலை ஆரம்பிக்க வேண்டும். இதன் ஊடாக யாப்பு எதிர்ப்பு இயக்கமாக அணிதிரளமுடியும். 1978இல் கொண்டு வரப்பட்ட ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் அரசியல் யாப்பு தமிழ் மக்களின் விருப்பங்களுக்கு மாறாகவே கொண்டுவரப்பட்டது. இதன் காரணமாகவே அன்றைய தமிழ் மிதவாதத் தலைவர்கள் அதனை எரித்து, தங்களின் எதிர்ப்பைக் காண்பித்தனர். அது போன்றதொரு எதிர்ப்பை காண்பிக்க வேண்டிய சூழல் மீண்டும் உருவாகியிருக்கின்றது.

எதிர்ப்பைக் காண்பிக்க வேண்டிய தருணங்களில் அதனைக் காண்பிப்பது ஒன்றே ஒரேயோர் அரசியல் வழிமுறையாக இருக்க முடியும். 13 ஐ நீக்கும் திட்டத்துடன் மேற்கொள்ளப்படும் புதிய அரசியல் யாப்பு முயற்சி தொடர்பில் இந்திய ஊடகங்களின் கரிசனையையும் திருப்ப வேண்டும். ஊடகங்கள் பேச முற்படும் போதுதான், இந்தியாவின் கொள்கை வகுப்பு குழாமினர் இலங்கையை நோக்கி திரும்புவர். எதுவும் தானாக நடைபெறப் போவதில்லை. அழுகின்ற குழந்தைதான் பால் குடிக்குமென்று கூறுவர். அதே போன்று தேவையுள்ள தமிழர்கள்தான் இது தொடர்பில் செயலாற்ற வேண்டும். இதில் முரண்பாடுகளுக்கு இடமளிக்காமல் இலக்கை முன்னிறுத்தி செயற்படுதே காலத்தின் தேவை. காலத்தின் கட்டாயங்களை புறக்கணிக்கும் தலைமைகள் ஒரு போதுமே தமிழ் மக்களுக்கான தலைமைகளாக இருக்க முடியாது.

தடைப்பட்ட அபிவிருத்திப் பணி யாழில் துரிதமாக முன்னெடுப்பு

அரச அதிபர் மகேசன் தகவல்

யாழ்ப்பாணம், ஓக 26

கொரோனாவால் தடைப்பட்டிருந்த அபிவிருத்திப் பணிகள் தற்போது துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்தார்

யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ். மாவட்டத்தில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி திட்டங்களில் இரண்டு பிரதான திட்டங்கள் அரசினாலும் மேலும் ஒரு திட்டம் உலக வங்கியின் நிதியீட்டத்திலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இதனைவிட பல திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன

இதில் “சப்ரிகம” செயல் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் 20 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 435 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் சுமார் 690 இனங்காணப்பட்ட திட்டங்கள் ஏற்கனவே கடந்த பாராளுமன்ற ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் அனுமதிக்கப்பட்டு இந்த வருடம் நடைமுறைப்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளன.

அந்த 690 திட்டங்களுக்குமான மொத்த மதிப்பீடு 87 கோடி ரூபா. இந்த திட்டத்தை கொரோனா காலப்பகுதிக்கு முன்னர் தொடங்கியிருந்தாலும் அதன் பிற்பாடு அந்த வேலைகள் முற்றாக முடிவுறுத்தப்படவில்லை. எனினும், 573 வேலைகள் முடிவுற்றுள்ளன. இதற்கென 24.5 கோடி ரூபா தற்போது வரை செலவிடப்பட்டுள்ளது. மிகுதி வேலைகள் இந்த வருட இறுதிக்குள் பூர்த்தி செய்யக்கூடியவாறான பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதேபோல கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 57 திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அவற்றுக்கான நிதி ஒதுக்கீடு 21.2 மில்லியன் ரூபா. இந்த 57 திட்டங்களில் தற்போது 46 திட்டங்கள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கென 16 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் பெரும்பாலும் இவ்வருட இறுதிக்குள் பூரணப்படுத்தப்படும்.

கொரோனா தொற்று மற்றும் நிலைமாறுகாலப் பகுதியில் வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படாமை போன்ற காரணத்தால் திட்டங்களைச் சீராக நடத்துவதில் சிறு தடங்கல் ஏற்பட்டிருந்தது. இருந்தபோதிலும், மிகுதி நான்கு மாத காலப்பகுதிக்குள் இந்த திட்டத்தை முடிவுறுத்துவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

இதனைவிட தந்திரோபாய நகர அபிவிருத்தி திட்டம் உலக வங்கியின் நிதியீட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்றது. இந்தத் திட்டத்தில் யாழ் நகரப்பகுதி உள்வாங்கப்பட்டு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. திட்ட மொத்த மதிப்பீட்டுத் தொகை 7013 மில்லியன் ரூபா. நான்கு பிரதான வகையாக இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இதனைவிட நகர மையத்தில் கலாசார பாரம்பரியம் மிக்க இடங்களை பேணிப் பாதுகாத்தல் என்ற திட்டத்தின் கீழ் பழைய கச்சேரி மற்றும் பழைய பூங்கா என்பன புனரமைப்பு செய்யப்படவுள்ளன. அதனை அபிவிருத்தி செய்து அதனை நவீன மயப்படுத்தி பேணுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

மேலும் நகர வீதிகளில் நடைபாதை,சைக்கிள் பாதை போன்றவை உள்ளடக்கப்பட்டு நகர மக்கள் பயன்படுத்தக்கூடிய திட்டமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அதனைவிட மூன்று பிரதானமான பூங்காக்கள் நகரத்தை மையமாகக் கொண்டு அமைக்கப்படவுள்ளன. அதேபோல் ஏனைய 6 சிறு பூங்காக்களும் இந்த நகரப்பகுதியில் அமைக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாண நகரைப் பொறுத்தவரை பிரதானமாக தேவைப்படுவது வாகனத் தரிப்பிடம். நகரப் பகுதியில் வாகன தரிப்பிடம் மிகவும் கஸ்டமான ஒரு விடயமாக காணப்படுகின்றது. அதனை பாதுகாப்பான இடமாக அமைப்பதற்குரிய முன்மொழிவு திட்டத்தில் உள்ளடக்கப்படவுள்ளது. அதாவது, பொதுப் பயன்பாட்டு வாகன தரிப்பிடம் திட்டத்தின் கீழ் இது செயற்படுத்தப்படவுள்ளது.

தந்திரோபாய நகர அபிவிருத்தி திட்டம் தற்பொழுது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்தத் திட்டத்தை அடுத்த வருட இறுதிக்குள் நிறைவு செய்ய எதிர்பார்த்திருந்தோம்.

எனினும், திட்டமிட்ட காலத்துக்குள் இந்த கொரோனா தொற்று காரணமாக அதனைச் செயற்படுத்த முடியாது போய்விட்டது - என்றார்.

அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’

செய்திகள்

யாழ்.-கொழும்பு ரயில் சேவை மீண்டும் வழமைக்கு வந்தது

யாழ்ப்பாணம், ஓக.26

யாழ்ப்பாணம்-கொழும்பு ரயில் சேவை மீண்டும் வழமைக்கு திரும்பியுள்ளதாக யாழ்ப்பாண ரயில் நிலைய அதிபர் ஆர். பிரதீபன் தெரிவித்தார்.

கொரோனா காலத்தின் பின்னர் தற்போதுள்ள ரயில் சேவை தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த மார்ச் மாதம் முதல் நாட்டில் ஏற்பட்ட கொரோனா தொற்று அச்சம் காரணமாக யாழ்ப்பாணம் - கொழும்பு ரயில் சேவைகள் தடைப்பட்டிருந்த நிலையில் கடந்த மாதம் மீண்டும் ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. தற்போது வழமைபோல் ரயில் சேவைகள் இடம் பெற்று வருகின்றன என யாழ் ரயில் நிலைய அதிபர் மேலும் கூறினார்.

தற்போது இடைநிறுத் தப்பட்டுள்ள நகர் சேர் கடுகதி ரயில் சேவை எதிர்வரும் 29ஆம், 30ஆம் ,31ஆம் மற்றும் 1ஆம் திகதிகளில் பரீட்சார்த்தமான சேவையை ஆரம்பிப்பதற்கு ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

கொரோனா காலத்தில் இடைநிறுத்தப்பட்டிருந்த இந்தச் சேவையானது எதிர்வரும் 29ஆம் திகதி முதல் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்படவுள்ளது. எனவே, பயணிகள் தங்களுக்குரிய முன் ஆசனப் பதிவுகளை யாழ். ரயில் நிலையத்தில் மேற்கொள்ள முடியும் - என்றார்.

கொரோனா அச்சுறுத்தல் முற்றாக நீங்கிவிடவில்லை

சவேந்திர சில்வா கூறுகிறார்

கொழும்பு, ஓக 26

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் முற்றாக நீங்கிவிட வில்லை என்று இராணுவத் தள பதி லெப். ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

இலங்கையில் இதுவரை சமூகத்துக் குள் கொரோனா தொற்று ஏற்படவில்லை. எனினும் அதற்கான அச்சுறுத்தலை நிராகரித்துவிட முடியாது. இலங்கையில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா தொற்றாளர் கள் இறக்குமதி செய்யப்பட்டவர்கள். வெளிநாடுகளில் உள்ள இலங்கையர் களைத் திருப்பி அழைத்து வரும் நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து மேற் கொள்கிறது.

வெளிநாடுகளில் இருந்து திரும்பிய இலங்கையர்கள் அல்லது வெளிநாட்டவர்களே தொற்றுக்குள்ளாகியிருக்கின்றனர். எனினும், கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் அரசு வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களைத் திருப்பி அழைத்துக் கொள்ளும் நடவடிக்கை களை மேற்கொண்டு வருகிறது.

எனவே, பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும், அச்சுறுத்தல் முற்றாக நீங்கி விட்டதாக அலட்சியமாக இருக்கக் கூடாது - என்றார்.

வடக்கு ரயில்களில் பயணிகள் எண்ணிக்கை பெரும் வீழ்ச்சி!

கொழும்பு, ஓக 26

கொரோனா தொற்றால் ரயில் சேவைகளின் மூலம் கிடைக்கும் அன்றாட இலாபம் 50 இலட்சம் ரூபாவாக குறைந்துள்ளது என்று ரயில்வே திணைக் கள முகாமையாளர் டிலந்த பெரேரா தெரிவித்துள் ளார்.

கொரோனாவுக்கு முன் னர் ரயில் சேவைகள் தினமும் ஒரு கோடி 70 இலட்சம் ரூபா - ஒரு கோடி 80 இலட்சம் ரூபா வருமானத்தைப் பெற்று வந்த தாகவும் அவர் தெரிவித்தார்.

சாதாரணமாக, அலுவலக ரயில்களுக்கு வரும் பயணி களின் எண்ணிக்கையில் குறைவு ஏற்படவில்லை என்றும், தூர ரயில் சேவைகளில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கையே குறைவடைந்துள்ளதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அதிக வருமா னத்தை ஈட்டித் தந்த பதுளை இரவு தபால் ரயில், பொலனறுவை, பெலி யத்தை, யாழ்ப்பாணம் ஆகிய தூர இடங்களுக்கான ரயில் பயணிகளின் எண்ணிக்கையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள தாகவும், சில தூர இடங்களுக் கான ரயில் சேவைகளில் வார நாட்களில் 70 பயணிகளே பயணிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கனரக வாகனம் தடம் புரண்டது

புத்தளம்-மாதம்பே பகுதி யில் வைத்தியசாலைக்கு அரு கில் கனரக வாகனம் ஒன்று வீதி யில் தடம் புரண்டு விபத்துக் குள்ளாகியுள்ளது. இந்த விபத் துச் சம்பவம், நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக மாதம்பே பொலிஸார் தெரிவித்தனர்.

கனரக வாகனம் மின்கம் பத்தில் மோதியதையடுத்து, மின் கட்டமைப்புக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

வாள்வெட்டு சந்தேக நபர் அல்வாயில் கைதானார்

யாழ்ப்பாணம், ஓக 26

அல்வாய் பகுதியில் இடம் பெற்ற வாள்வெட்டுச் சம்பவத் துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைதான வர் அல்வாய் பிரதேசத் தைச் சேர்ந்த 30 வயதுடைய வராவார்.

அல்வாய் பகுதியில் இடம் பெற்ற வாள்வெட்டுச் சம்பவத் துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் நால்வர் ஏற்கனவே கைது செய்யப்பட்டிருந்தனர். ஐந்தாவது சந்தேக நபர் எனக் கூறப்பட்ட இளைஞனே இப்போது கைதாகியுள்ளார் எனப் பொலிஸார் கூறினர்.

35 ராஜாங்க அமைச்சுக்களுக்கு புதிய செயலாளர்கள் நியமனம்

35 இராஜாங்க அமைச்சுக் களுக்கான புதிய செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 19 ஆம் திகதி இடம் பெற்ற அமைச்சரவை கூட் டத்தின்போது இந்த நியமனங் களுக்கான அனுமதி வழங் கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் இந்த நியமனங்களுக்கான வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானிக்கு அமைய நிதி மற்றும் மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சின் செய லாளராக ஆர்.எம் ரத்னாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேநேரம், சமுர்த்தி வதிவிட பொருளாதார, நுண் நிதிய, சுய தொழில் வியாபார அபிவிருத்தி மற்றும் கீழுழைப்பு பயன்பாட்டு அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளராக டபிள்யூ.எம். என்.பி ஹபுஹின்ன நியமிக் கப்பட்டுள்ளார்.

தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிரா மிய சிற்பக்கலைகள் மேம்பாடு இராஜாங்க அமைச்சின் செயலா ளராக எச்.டி கொடிக்கார, கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப்பொருள் கைத் தொழில் இராஜாங்க அமைச் சின் செயலாளராக ரஞ்சித் அபேசிறி ஆகியோர் நியமிக் கப்பட்டுள்ளனர்.

அதேநேரம், தோட்ட வீட மைப்பு மற்றும் சமுதாய உட் கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் செய லாளராக டி.பி.ஜி குமாரசிறி மற்றும் சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வு இரா ஜாங்க அமைச்சின் செயலா ளராக பி.சி கருணாரத்ன ஆகியோர் நியமிக்கப் பட்டுள்ளனர்.

உணவில் தூக்க மாத்திரை கலந்து கழுத்தை நெரித்து இளம் பெண் படுகொலை

பிரதான சந்தேக நபர் வாக்குமூலம்

"தூக்க மாத்திரைகளை (Piriton) அதிகளவில் சாப்பாட் டில் கலந்து மருமகளுக்குக் கொடுத்தோம். அவள் மயக்க நிலையை அடைந்ததும் உப்பளப் பாத்திக்கு இழுத்துச் சென்று கழுத்தை நெரித்தோம். அதன் பின்னர் அவளது முகத்தை நீருக்குள் அமுக்கிக் கொலை செய்தோம்"

இவ்வாறு மன்னாரில் சடலமாக மீட்கப்பட்ட இளம் பெண்ணைக் கொலை செய்த அவரது மாமனார் வாக்குமூலம் அளித்துள்ளார்.

பிரதான சந்தேக நபரான அவர் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்ட பின்னர் இந்த வாக்கு மூலத்தை வழங்கியுள் ளார்.

இளம் பெண்ணின் உடலின் பாகங்கள் ஆய்வுக்காக கொழும்புக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ள நிலையில், தூக்க மாத்திரைகள் கொடுத்து பெண் ணைக் கொலை செய்ததாகப் பிரதான சந்தேக நபர் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

நெடுந்தீவைச் சேர்ந்த டொறிக்கா ஜூயின் (வயது-21) என்ற இளம் பெண் கழுத்து நெரிக்கப்பட்டு கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட பின் மன்னார் உப்பளத்தில் வீசப்பட்டிருந்தார்.

அவரது சடலம் மன்னார் உப்பளம் பகுதியில் இருந்து கடந்த 14ஆம் திகதி வெள்ளிக் கிழமை பொலிஸாரால் மீட்கப்பட்டது.

சம்பவத்தையடுத்து மன்னார் தலைமையகப் பொலி ஸார் விசாரணைகளை ஆரம் பித்தனர்.

அதனடிப்படையில் முன்னெ டுக்கப்பட்ட விசாரணைகளில் கொல்லப்பட்ட இளம் பெண் ணின் சகோதரி (வயது-30), அவரது பெரியதாயின் மகனின் மனைவி ஆகிய இருவரும் நெடுந்தீவில் வைத்து நேற்று முன் தினம் கைதுசெய்யப்பட்டனர்.

விசாரணைகளின் பின்னர் இருவரும் மன்னார் நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், தலைமறை வாகியுள்ள 50 வயதுடைய பிரதான சந்தேக நபரான கொல்லப்பட்ட பெண்ணின் மாமனார் தேடப்பட்டு வந்தார்.

அவர் நேற்று முன் தினம் இரவு வவுனியாவில் வைத்துக் கைது செய்யப் பட்டார். அவரை சட்ட மருத்துவ அதிகாரியிடம் முன் னிலைப்படுத்தியபின் பொலிஸ் தடுப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

மாகாணத் தேர்தல் வேண்டாம் அரசமைப்பை உடன் மாற்றுக!

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் போர்க்கொடி

கொழும்பு,ஓக.26

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ள தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், புதிய அரசமைப்பை உருவாக்கும் விடயத்துக்கே அரசு முன்னுரிமை வழங்கவேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அந்த அமைப்பின் தலைவர் கலாநிதி குணதாஸ அமரசேகர தெரிவித்திருப்பதாவது -

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளன. அவற்றிலுள்ள சில அதிகாரங்கள் அச்சுறுத்தலானவை. தற்போது அவை நடைமுறைப் படுத்தப் படவில்லை என்ற போதிலும் சட்டத்தில் உள்ளன.

எனவே, அவற்றில் திருத்தம் மேற்கொள்ளாது மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு நாம் கடும் எதிர்ப்பை வெளியிடுகின்றோம். மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் மட்டுப்படுத்தல் உட்பட நாட்டுக்குத் தேவையான அரசியல மைப்பொன்றை உருவாக்கிய பின்னரே தேர்தல் நடத்தப் படவேண்டும்.

நாட்டில் இரண்டாண்டுகளாக மாகாண சபைகள் இயங்கவில்லை. இதனால் யாருக்கும் எந்தவித இழப்புகளும் இல்லை. எனவே, புதிய அரசமைப்பு இயற்றப்படும் வரை தேர்தலை நடத்தாமல் இருப்பதே சிறப்பு - என்றார்.

முதியவரின் மூக்கில் 11 குளவிகள் மீட்பு!

குளவி ஆணிகள் அந்த நபரின் உடம்பெங்கும் இருந்தன. அவற்றை மருத்துவர்கள் அகற்றினர்.

கொழும்பு, ஓக 26

குளவிக் கொட்டுக்கு இலக்காகிப் பதுளை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட வயோதிபரொருவரின் மூக் கின் ஊடாக பதினொரு குளவிகளை வைத்தியர்கள் மீட்டசம்பவ மொன்று நேற்றுமுன் தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

கலவுட பிரதேச வைத்திய சாலையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக குளவி கொட்டுக்கு இலக்கான 70 வயது நிரம்பிய வயோதிபர், பதுளை அரசினர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அந்த வயோதிபர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக் கப்பட்டு சிகிச்சை மேற்கொள் ளப்பட்டது.

அவ்வேளை, அந்த நபரின் மூக்கின் ஊடாக11 குளவிகள் வெளியில் எடுக்கப்பட்டன. அத்துடன் நூற்றுக்கணக்கான குளவிகள் கொட்டியதால் குளவி ஆணிகள் அந்த நபரின் உடம்பெங்கும் இருந்தன. அவற்றை மருத்துவர்கள் அகற்றினர்.

மூன்று விசேட வைத்திய நிபுணர்கள், ஆறு தாதிகள் இணைந்து குளவி கொட்டுக்கு இழக்கான நபரை மூன்று மணித்தியாலங்கள் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தினர் என பதுளை அரசினர் மருத்துவமனை விசேட வைத்திய நிபுணர் பாலித்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

எங்களது சம்மதம் இல்லாமல் மைத்திரியை உள்வாங்குவதா?

அது நடக்காது என்கிறார் மனோ

கொழும்பு, ஓக 26

ஐக்கிய மக்கள் சக்திக்குள் மைத்திரிபால சிறிசேன போன்ற வர்களை உள்வாங்குவதாக இருந்தால் கூட்டணித் தலைவர் களின் உடன்பாடு மிக அவசியம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

சமகால அரசியல் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சக்தி சஜித் பிரேமதாஸவுக்கு மட்டும் உடைமையானது அல்ல. கூட்டணித் தலைவர்களாகிய நாங்களும் உடைமையாளராக இருக்கின்றோம். யாரும் யாருடனும் பேச்சுக்களை நடத்தலாம். ஆனால் ஐக்கிய மக்கள் சக்திக்குள் புதிதாக யாரையும் உள்வாங்குவதாக இருந்தால் கூட்டணித் தலைவர்களின் உடன்பாடும் அவசியம்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர்க.வி.விக்னேஸ்வரனது உரையை நாடாளுமன்றப்பதிவில் இருந்து நீக்குமாறு மனுஷ நாணயக்கார கூறியது அவரது தனிப்பட்ட கருத்தாகும். அவருடைய கருத்து ஐக்கிய மக்கள் சக்தியின் கருத்தாக அமைந்து விடாது.

இலங்கையின் வரலாற்றை பார்க்கின்றபோது விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் இங்கு இயக்கர், நாகர் என்ற இரு திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்ந்ததாக மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளது.

அதுபோல மகாவம்சத்தை விட காலத்தால் முற்பட்ட இதிகாசமாகிய இராமாயணத்தில் இலங்கைத் தீவுபற்றியும் அதன் மன்னனும் சிவ பக்தனுமாகிய இராவணன் பற்றியும் கூறப்பட்டுள்ளது. எனவே, தமிழர்கள் இலங்கையின் மூத்த குடிகள் என கூறுவதில் எந்தப் பிரச்னையும் இல்லை. - என்றார்.

பண்டாரவன்னியனின் 217ஆம் ஆண்டு நினைவு

வன்னி இராச்சியத்தின் இறுதி மன்னன் பண்டாரவன்னியனின் 217ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு வவுனியாவில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா நகரசபை மற்றும் விழாக்குழுவின் ஏற்பாட்டில் நகரசபை தலைவர் இ. கௌதமன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

இரு நிகழ்வுகளாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வுகளில் காலை 8.15 மணிக்கு வவுனியா மாவட்ட செயலக முன்றலில் அமைந்துள்ள பண்டாரவன்னியனின் நினைவுத் தூபிக்கு ஜனாதிபதி சட்டத்தரணி மு.சிற்றம்பலம் மலர்மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தினார். அதனைத் தொடர்ந்து நகரசபை உறுப்பினர்களும், பொது அமைப்பினரும் சிலைக்கு மாலை அணிவித்து, மலரஞ்சலியும் செலுத்தினர்.

நிகழ்வின் இறுதியில் தமிழருவி சிவகுமாரனால் பண்டாரவன்னியன் தொடர்பான நினைவுப் பேருரையும் நிகழ்த்தப் பட்டது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகச் சட்டத்தரணியும் முன்னாள் வவுனியா மாவட்ட சபை தலைவருமான மு.சிற்றம்பலம் கலந்துகொண்டதுடன்,

நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், மாவட்ட செயலாளர் சமன் பந்துலசேன, மேலதிக செயலர் தி.திரேஸ்குமார் வவுனியா வளாக முதல்வர், ரி.மங்களேஸ்வரன், உள்ளூராட்சி மன்ற தலைவர்கள், உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

மஞ்சள் தூளில் மா கலப்படம் வர்த்தகர்கள் மீது நடவடிக்கை

சந்தைகளில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள மஞ்சள் தூளில் கோதுமை மா கலந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் 80 வீதமான மஞ்சள் தூளில் கலப்படம் உள்ளமை தெரியவந்துள்ளது.

சந்தைகளிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகள், தர நிர்ணய பணியகத்தினூடாக பரிசோதிக்கப்பட்டதாக நுகர்வோர் விவகார அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இந்தப் பரிசோதனையினூடாக மஞ்சள் தூளில் 80 வீத கோதுமை மா கலக்கப்பட்டமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக சபையின் தலைவர், ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் ஷாந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மஞ்சள் தூளில் கலப்படம் செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

நாட்டில் மஞ்சள் இறக்கு மதிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனினும், நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட மஞ்சள் அடங்கிய 62 கொள்கலன்களை அரசுடமையாக்குவதற்கு இலங்கை சுங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மேலும் 296 பேர் நாடு திரும்பினர்

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக வெளி நாடுகளில் சிக்கியிருந்த மேலும் 296 பேர் நேற்று அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.

தென் கொரியாவிலிருந்து 275 பேரும் கட்டாரிலிருந்து 21 பேரும் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

அனைவருக்கும் பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களைத் தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மலசலகூட குழியில் இருந்து 500 துப்பாக்கி ரவைகள் மீட்பு

கொழும்பு, ஓக 26

கம்பஹா-மொரகொட பகுதியில் தன்னியக்க துப்பாக்கிக்கான 500 ரவைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பொலிஸார் முன்னெடுத்த சுற்றிவளைப் பில் இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதன்போது கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கி ரவைகள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

வீடொன்றின் மலசல கூட குழியில் மறைத்து வைக்கப் பட்டிருந்த ரவைகளே மீட்கப் பட்டுள்ளன.

இதேவேளை, ஹோக்கந்தர பகுதியில் கைப்பற்றப்பட்ட துப்பாக்கிகள் தொடர்பில் கைது செய்யப்பட்ட பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்டவிசாரணைகளின் பின்னரே இந்த துப்பாக்கி ரவைகள் கண்டுபிடிக்கப் பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

செய்திகள்

சந்திரசிறிக்கு பின் வடக்கில் ஆளுமையற்ற ஆளுநர்கள்!

அமைச்சர் டக்ளஸ் சுட்டிக்காட்டு

வவுனியா,ஓக. 26

முன்னாள் இராணுவ அதிகாரி ஜெனரல் சந்திரசிறிக்குப் பின்னர் வடக்கில் ஆளுநர்களாக நியமிக்கப்பட்ட எந்த சிவில் அதிகாரிகளும் தமது வேலையை ஒழுங்காகச் செய்யவில்லை என்று கடற்தொழில் மற்றும் நீரியல்வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வவுனியாவுக்கு நேற்று விஜயம் செய்த அவர் அரச நியமனங்கள் நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகளைச் சந்தித்துவிட்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரச நியமனங்களில் பலரது விண்ணப்பங்கள் பல் வேறு காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்டுள்ளதாக அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அவர்களது சான்றிதழ்கள் அங்கீகரிக்கப்பட்டிருப்பின் அவர்கள் பட்டதாரிகளாக உள்வாங்கப்படவேண்டும் என் பது தான் அரசின் இறுதி நிலைப் பாடாக இருந்தது.

அந்த வகையில் மேலதிக மாக 10 ஆயிரம் பேருக்கு அரச நியமனத்தை வழங்குவதற்கு ஜனாதிபதி இணங்கியிருக்கின் றார். மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டிருந்தவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருந்தால் நீங்கள் மேல்முறையீட்டுக்காக விண்ணப்பிக்கமுடியும்.

அத்துடன் ஒரு இலட்சம் வேலைவாய்ப்புத்திட்டம் வடக்கு - கிழக்கிலும் செயற் படுத்தப்படும். இந்த விடயம் தொடர்பாக நாளை (இன்று) அமைச்சரவையில் கலந்துரை யாடவுள்ளேன்.

13 ஆவது திருத்தச்சட் டத்தை தென்னிலங்கைத் தலை வர்கள் மாத்திரம் எதிர்க்க வில்லை. தமிழ்த் தலைவர்களும் அதனை எதிர்த்துள்ளனர். 13ஆவது திருத்தச்சட்டத்தை விடுத்து வேறு ஒரு தீர்வு வேண்டும் என்று புலித் தலைமை மற்றும் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு அன்று இதனை எதிர்த்தார்கள்.

எனினும் அதனை நடை முறைப்படுத்தவேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப் பாடாகவும் இருக்கின்றது. என்னுடைய நிலைப்பாடும் அதுவே. அதுதான் சாத்திய மானது. மக்கள் எனக்கு கூடிய ஆசனங்களை தந்திருந்தால் இவற்றை நான் இலகுவாகத் தீர்த்திருப்பேன்.

வடக்கில் இராணுவ அதி காரியை ஆளுநராக நியமிக் கும் நிலைப்பாடு இதுவரை அரசிடம் இல்லை. எனினும் முன்னாள் ஜெனரல் சந்திர சிறியை ஆளுநராக நியமிக்கு மாறு இந்த அரசு வந்தவுடன் நான் கோரியிருந்தேன்.

ஏனெனில் அவருக்கு பின்னர் ஆளுநராக வருகை தந்த எந்த சிவில் அதிகாரிகளும் தமது வேலையை ஒழுங்காகச் செய்யவில்லை. எனவே சந்திர சிறியை நியமிக்க கோரினேன். எனினும் ராணுவ அதிகாரியை நியமிக்காமல் சிவில் அதிகாரி யையே நியமிக்கவேண்டும்என்று ஜனாதிபதியும் பிரதமரும் அன்று கூறினார்கள்-என்றார்.

விக்கியின் உரையை நீக்கினால் சர்வதேசத்திடம் முறையிடுவோம்

சிவாஜிலிங்கம் சீற்றம்

யாழ்ப்பாணம், ஓக 26

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரனின் உரையை, நாடாளுமன்றப் பதிவேட்டிலிருந்து நீக்கினால், சர்வதேச சமூகத்திடம் முறையிடுவோமென வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இது குறித்து மேலும் தெரிவித்த அவர்,

நாடாளுமன்ற முதல்நாள் அமர்வில், விக்னேஸ்வரன் ஆற்றிய உரை, சிங்கள-பௌத்த பேரினவாதிகளைக் கொதித்தெழ வைத்துள்ளது.

எங்கள் வரலாற்றை, எங்கள் விருப்பங்களை நாம் தெரிவிப்பது அவர்களுக்குக் கொதிப்பை ஏற்படுத்துகிறதென்றால், எங்களை விட்டுவிடுங்கள். நீங்கள் உங்கள் பாட்டில் செல்லுங்கள். நாங்கள் எங்கள் வழிகளைப் பார்த்துக் கொள்கின்றோம்.

தமிழ்மொழியும் ஒரு மொழி என்று அங்கீகரிக்கப்பட்ட பின்னர், தமிழ் மொழியில் உரையாற்றியதையடுத்து கூக்குரலிடுவதும் நாடாளுமன்றப் பதிவேட்டில் இருந்து உரையயை நீக்குவதை பரிசீலிப்பதாக சபாநாயகர் கூறுவதும், ஜனநாயக முறைக்கு விரோதமான ஒரு செயற் பாடாகவே கருதுகிறோம்.

அவ்வாறு நீக்கினால், நாங்கள் சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்திடமும் சர்வதேச சமூகத்திடமும் முறையிடுவோம்-என்றார்.

குருநாகல் முதல்வரின் பிடியாணை நிறுத்தம்

குருநாகல் அரச சபைக் கட்டடம் தகர்க்கப்பட்ட சம்பவம் தொடர்பில் குருநாகல் மாநகர சபை மேயர் துஷார சஞ்சீவ விதாரண உட்பட 5 பேரைக் கைது செய்வதற்காகப் பிறப்பிக்கப்பட்ட பிடியாணை உத்தரவை இடைநிறுத்துமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதிபதி ஏ.எச். எம்.டி. நவாஸ் மற்றும் நீதிபதி சோபித ராஜகருணா ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட குழுவினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, குறித்த மனுவின் விசாரணை நிறைவடையும் வரை இந்த இடைக்கால தடையுத்தரவு அமுலில் இருக்கும் என நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

பண்டாரவன்னியன் சிலைக்கு முல்லைத்தீவில் நேற்று அஞ்சலி

முல்லைத்தீவு, ஓக 26

வன்னியின் இறுதி மன்னன் மாவீரன் பண்டார வன்னியனின் 217ஆம் ஆண்டு நினைவு நாளான நேற்று முல்லைத்தீவு நகரில் அமைந்துள்ள பண்டார வன்னியனின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தலைமையில் பண்டாரவன்னியனின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து, மலர் தூவி நினைவு நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கரை துரைப்பற்று பிரதேசசபை உறுப்பினர்களான சின்னராசா லோகேஸ்வரன், மரியநாயகம் தொம்மைப்பிள்ளை, ஆகியோருடன் மக்களும் பங்கேற்றனர்.

கடலில் 13 பேர் கைது

கொழும்பு, ஓக 26

கொழும்பு கோட்டை அதியுயர் பாதுகாப்பு வலயக் கடற் பகுதிக்குள் அனுமதியின்றிச் சென்ற வெளிநாட்டவர் உட்பட 13 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை இரண்டு படகுகளில் பயணித்துக் கொண்டிருந்தபோதே கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இவர்களுடன் கொழும்பில் உள்ள பிரதான ஹோட்டல் ஒன்றின் ஊழியர்கள் சிலரும் இருந்துள்ளனர். புகைப்படம் எடுப்பதற்காக இவர்கள் கடலுக்குள் சென்றுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஜனாஸா எரிப்பு விவகாரத்தில் அரசு தொடர்ந்தும் விடாப்பிடி

மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் விசனம்

முல்லைத்தீவு, ஓக 26

ஜனாஸா எரிப்பு விடயத்தில், அரசு தொடர்ந்தும் விடாப்பிடியாக இருந்து வருவதாகவும் இது தொடர்பிலான கோரிக்கைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டு, வைத்தியர்களின் மேல் பழியைப் போட்டுவிட்டு வாளாவிருப்பதாகவும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

முஸ்லிம்களின் உணர்வுகளை மதிக்காமல், மதக்கடமைகளை இல்லாமலாக்கவே இவ்வாறு செயற்படுகின்றார்கள் எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

வன்னி மாவட்ட வாக்காளர்களுக்கு நன்றி கூறும் நிகழ்வு, முல்லைத்தீவில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த விவகாரம் குறித்து, வைத்தியர்கள் உள்ளடங்கிய நிபுணர் குழுவொன்றை நியமித்து, ஆராயவேண்டுமென்று விடுக்கப்பட்ட கோரிக்கைகள் கூட மறுதலிக்கப்படுகின்றன.

பாராளுமன்றில் 2/3 அல்லது 5/6 பெரும்பான்மை ஆசனங்களோ அல்லது 225 பிரதிநிதிகளையும் கூட ஆளுங்கட்சி பெற்றாலும், இறைவன் ஒருவன் இருக்கின்றான் என்ற நம்பிக்கை கொண்டவர்கள் நாங்கள். அனைத்தையும் ஆள்பவன் அவனே என்று முழுமையான நம்பிக்கையுடன் நாம் வாழ்வதாலேயே, இன்னும் பொறுமை காக்கின்றோம். எனவே, இந்த அநியாயச் செயலை இனிமேலாவது நிறுத்துங்கள்.

எதிர்க்கட்சி அரசியலை மேற்கொண்டே, வன்னி மாவட்டத்தில் ஆகக் கூடிய விருப்பு வாக்குகளை நான் பெற்றுக் கொண்டேன். மக்கள் காங்கிரஸ் கட்சி சார்ந்த வாக்காளர்களுக்கு கிடைத்த கௌரவமாகவே இதனைக் கருதுகின்றோம்.

கடந்த ஐந்து தேர்தலில் போட்டியிட்டுள்ளோம். ஒவ்வொரு தேர்தல்களிலும் விருப்பு வாக்குகளின் எண்ணிக்கை அதிகரித்து வந்ததுடன், இம்முறை மாவட்டத்தில், விருப்பு வாக்கில் முதலிடம் பெறவும் முடிந்தது.

தாங்க முடியாத தொல்லைகள், மனக் கஷ்டங்கள், தடைகளுக்கு மத்தியிலேயே இந்த அடைவைப் பெற்றுள்ளோம். பல மாவட்டங்களில் போட்டியிட்ட நமது கட்சி வேட்பாளர்களுக்காக, பிரசாரம் செய்ய முடியாத நிலையும் எமக்கு ஏற்பட்டது - என்றார்.

செய்திகள்

சகலரதும் ஒத்துழைப்புடன் புதிய அரசமைப்பு அமையும்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உறுதி

கொழும்பு,ஓக.26

புதிய அரசமைப்பொன்றை அமைப்பதற்கு, கட்சி பேதங்களைக் கடந்து அனைவரது ஒத்துழைப்பும் பெற்றுக்கொள்ளப்படும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான விசேட செயலமர்விலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

50 வருடங்களுக்கு முன்னர், நாமும் இதேபோன்று ஒரு செயலமர்வில் இளைய நாடாளுமன்ற உறுப்பினர்களாகக் கலந்துகொண்டிருந்தமை எனக்கு நினைவுக்கு வருகிறது.

இது ஒரு நடைமுறையாக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது ஒரு வரலாறாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நாடாளுமன்றைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டியது அத்தியாவசியமாகும்.

இது தொடர்பான புரிந்துணர்வை நாடாளுமன்றுக்கு உள்ளேதான் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த புரிந்துணர்வுதான் உறுப்பினர்களை முன்னோக்கிப் பயணிக்க வழிவகை செய்யும்.

புதிய உறுப்பினர்கள் பலர் இன்று நாடாளுமன்றுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். புதியவர்கள் வருவதை நாம் மகிழ்ச்சிகரமாக வரவேற்கிறோம். இவர்கள்தான் நாட்டின் எதிர்காலத் தலைவர்களாக வரப்போகிறார்கள்.

கடந்த தேர்தலை யாரும் மறந்துவிடப்போவதில்லை. எமது தரப்புக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்ததோ அல்லது இலங்கையின் பழைய கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு ஆசனம்கூட கிடைக்காததோ இங்கு விசேடமானது அல்ல.

ஆனால், இந்த தேர்தல் ஊடாக ஒரு பாடத்தை மக்கள் எமக்கு கற்பித்துள்ளார்கள் என்பது மட்டும் உண்மையாகும்.

71 வீதமான மக்கள் வாக்களித்துள்ளார்கள். இது எதிர்காலத்துக்கு விடுக்கப்பட்ட ஒரு சமிக்ஞையாகவே நாம் கருதுகிறோம்.

நாட்டு மக்கள், ஜனநாயகத்துக்கும் முறையான வேலைத்திட்டத்துக்கும் ஆதரவானவர்கள் என்பதைக் காண்பித்துள்ளார்கள். வேலை செய்யாதவர்களை வீட்டுக்கு அனுப்பியுள்ளார்கள். நாட்டுக்கு ஆதரவில்லாதவர்களை நிராகரித்துள்ளார்கள்.

இதேபோன்றுதான் மக்கள் எதிர்காலத்திலும் செயற்படுவார்கள் என்று நாம் கருதுகிறோம். பெரியவர்-சிறியவர் என்று பார்க்காமல், புதியவரா- அனுபவசாலியா என்று பார்க்காமல், மக்கள் தீர்ப்பு வழங்கியுள்ளார்கள்.

மக்களைப் பொறுத்தவரை, மக்களுக்கான சேவை செய்யத் தகுதியற்றவர்களை, அவர்கள் நிராகரிப்பார்கள் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

இதுதான் மக்களுக்கான அரசியல். நாம் என்றும் மக்களுடன் தொடர்பில் இருக்கவேண்டும். இதனை புதிய உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும்.

எமக்கு அரசியல் பழிவாங்கலில் ஈடுபட தற்போது நேரமில்லை. இதற்காக மக்கள் எமக்கு ஆணையும் வழங்கவில்லை. நாட்டுக்கு புதிய அரசமைப்பொன்றை அமைக்கவே மக்கள் இந்தத் தேர்தலில் எமக்கு ஆணை வழங்கியுள்ளார்கள்.

எனவே, இதனை நாம் முதலில் நிறைவேற்ற வேண்டும். அரசமைப்பு என்பது ஒரு தரப்புக்கு மட்டும் உரித்தானது அல்ல. உண்மையில் இதன் ஒவ்வொரு சரத்தும், எமது வாழ்க்கையை தீர்மானிக்கும்.

எனவே, இதற்கு அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்பும், கட்சி பேதங்களைக் கடந்து தேவைப்படுவது எமது அரசியல் பொறுப்பாக உள்ளது. இதுதான் மக்களின் எதிர்ப்பார்ப்பாகும்-என்றார்.

ரஞ்சனின் வழக்கு விசாரணை நிறைவு

கொழும்பு, ஓக.26

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டு தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிரான வழக்கு விசாரணைகள் நேற்று செவ்வாய்க் கிழமையுடன் உயர்நீதிமன்றத்தில் நிறைவுக்கு வந்துள்ளன.

எவ்வாறாயினும் இந்த விசாரணைகள் தொடர்பில் மேலதிக கருத்துக்களை தெரிவிக்க ஒக்ரோபர் மாதம் 21 ஆம் திகதி வழக்கு மீள விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

யானை தாக்கி ஒருவர் படுகாயம்

கெப்பிற்றிக்கொல்லாவை பகுதியில், யானை தாக்குதலுக்குள்ளாகி ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவர் வேலைசெய்து கொண்டிருந்தபோதே, அப்பகுதிக்கு வந்த காட்டுயானை அவரைத் தாக்கியுள்ளது.

இதனால் படுகாயமடைந்த அவர் உடனடியாக மீட்கப்பட்டு, பதவியா பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

சம்பவத்தில் அப்துல் வகீட் என்ற 40 வயதுடைய நபரே இவ்வாறு படுகாய மடைந்தவராவார்.

கிளிநொச்சி பொதுச் சந்தைக்குள் 38 வியாபார நிலையங்களுக்கு 'சீல்'

வியாபாரிகள் எதிர்ப்புப் போராட்டம்

கிளிநொச்சி, ஓக 26

கிளிநொச்சி பொதுச்சந்தைக்குள் உள்ள 38 வியாபார நிலையங்கள் சீல் வைக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி பொதுச் சந்தையில் உள்ள 38 வியாபார நிலையங்களுக்கு நேற்று முன் தினம் இரவு சீல் வைக்கப்பட்டது. இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே மரக்கறி வியாபாரிகள் நேற்று போராட்டம் நடத்தினர்.

கிளிநொச்சி சந்தையில் உள்ள மரக்கறி வியாபாரிகள் 38 பேருக்கும், கரைச்சி பிரதேச சபையின் தவிசாளரினால் நேற்று முன் தினம் பிற்பகல் கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

எனினும் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் கூட்டத்துக்கு, முற்பகல் 11 மணிக்கே திடீரென அறிவிக்கப்பட்டதாகவும், இதனால் 38 வியாபாரிகள் கூட்டத்தில் கலந்து கொள்ளமுடியாது போனதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.

கூட்டத்தில் கலந்துகொள்ளாத 38 வியாபாரிகளின் வர்த்தக நிலையங்களுக்கு நேற்று முன் தினம் இரவு தவிசாளரின் உத்தரவுக்கு அமைய சீல் வைக்கப்பட்டது.

அந்தப் பகுதிக்கு நேற்று வருகை தந்த கிளிநொச்சி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சு.பிரபாகரன், வியாபாரிகளைச் சந்தித்து கலந்துரையாடியதுடன். வியாபார நிலையங்களைத் திறந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணித்தார்.

அத்துடன், இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து பதிலளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனையடுத்து, வியாபாரிகள் தமது போராட்டத்தை கைவிட்டு தமது வியாரபார நடவடிக்கைகளை ஆரம்பித்தனர்.

கிழக்குத் தொல்பொருள் செயலணிக்கு மேலும் 4 தேரர்களை நியமித்த கோட்டா

அமைச்சர் டக்ளஸின் கோரிக்கை வீணானது

கொழும்பு, ஓக 26

கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை முறையாக மதிப்பீடு செய்து பாதுகாப்பதற்கு அமைக்கப்பட்ட ஜனாதிபதி செயலணிக்கு மல்வத்து, அஸ்கிரிய பீடங்களைச் சேர்ந்த தேரர்கள் நால்வரை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

தமிழ் மக்களால் இந்தச் செயலணிக்குக் கடும் எதிர்ப்பு வெளிப்படுத்தப்பட்டு, தமிழ்ப் பிரதிநிதியை செயலணியில் இணைக்குமாறு அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரியிருந்தபோது இவை கவனத்தில் எடுக்கப்படாமல் பௌத்த பீடாதிபதிகள் உட்பட மேலும் 4 தேரர்கள் இந்தச் செயலணிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

பௌத்த ஆலோசனைச் சபையின் ஆலோசனைக்கு அமைய இந்தச் செயலணி கடந்த மே மாதம் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டது.

இந்தச் செயலணிக்கு அஸ்கிரி பீடத்தின் அதிவணக்கத்துக்குரிய வெண்டறுவே தர்மகீர்த்தி ஸ்ரீரத்னபால உபாலி அபிதான அனுநாயக்க தேரர், மல்வத்து பீடத்தின் பதிவாளர் கலாநிதி வணக்கத்துக்குரிய பஹமுணே சுமங்கல நாயக்க தேரர், அஸ்கிரிய பீடத்தின் பதிவாளர் கலாநிதி வணக்கத்துக்குரிய மெதகம தம்மானந்த நாயக்க தேரர், மல்வத்து பீடத்தின் நிர்வாகசபை உறுப்பினர் கலைமாணி அம்பன்வெல்லே ஸ்ரீ சுமங்கல தேரர் ஆகிய நான்கு பேரும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளதாக அதி சிறப்பு வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

நீண்ட கால திட்டத்தின்படியே அமைச்சர்கள் நியமனம்

பிரசன்ன ரணதுங்க கூறுகிறார்

பொருத்தமானதும் நீண்ட காலத் திட்டத்தின் அடிப்படையிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இராஜாங்க அமைச்சுக்களை ஒதுக்கியுள்ளார் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டார்.

கம்பஹாவில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், தேசியவாதத்தின் மதிப்பை அறியாத சில குழுக்களே புதிய அமைச்சரவை குறித்து விமர்சிக்கின்றன.

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் நீண்டகாலத் திட்டத்தை வகுக்கவும் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் நடைபெற்ற மக்கள் சந்திப்புகளின்போது, மட்பாண்ட கைத்தொழில் மற்றும் பிற உள்ளூர் கைத்தொழில் உற்பத்திகளை அபிவிருத்தி செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

எனவேதான், உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்துவதற்காக, ஜனாதிபதி, அமைச்சர்களுக்கான பதவிகளை அதன்படி ஒதுக்கினார்-என்றார்.

ஈழநாடு
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Eelanadu

விக்கியின் உரை ஹன்சார்ட்டில்!

சர்சைகளுக்கு மத்தியிலும் இணைப்பு

கொழும்பு, ஓக 26

கடந்த நாடாளுமன்ற அமர்வின் போதும் அதன் பின்னரும் தெற்கு அரசியலில் சர்ச்சையை ஏற்படுத்திய தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரனின் நாடாளுமன்ற உரை ஹன்சார்ட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

உலகில் உயிர்வாழும் மூத்த மொழிகளில் ஒன்றும், இந்த நாட்டின் முதல் சுதேச குடிமக்களின் மொழியிலும் நான் சபாநாயகருக்கு வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் கடந்த 20 ஆம் திகதி நாடாளுமன்றில் ஆற்றிய உரையில் குறிப்பிட்டிருந்தார்.

இதனை அடுத்து சி.வி.விக்னேஸ்வரனின் உரையை ஹன்சார்ட்டில் இருந்து நீக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார கோரிக்கை விடுத்திருந்தார்.

இது குறித்து ஆராய்வதாக அன்றைய தினமே சபாநாயகர் மஹிந்த யப்பா அபேவர்தன தெரிவித்திருந்தார். ஆயினும் விக்னேஸ்வரனின் உரையின் விவரிக்கப்படாத பதிப்பு நாடாளுமன்றத்தின் ஹன்சார்ட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

(மாண்புமிகு க.வி. விக்னேஸ்வரன்)
(The Hon. C.V. Wigneswaran)
மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி சார்பில் முதற்கண் உங்களுக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

I start my felicitations, Hon. Speaker, hailing you in my mother tongue, the oldest living language of this world and the language of the first indigenous inhabitants of this country, and proceed in the link language. I thank you for accepting such a high position in our Parliamentary tradition. Sir, I am sure, you would bring with your high Office your experience with men and matters gained throughout your long political career.

We have a very powerful Government now. A similar Government was constituted under the late J.R. Jayewardene in 1977. It was during that regime that we had the 1983 Pogrom. Certainly, this Government too could follow the path of the Elephant of that time and end up as today reduced to a single Member in the future. But, I am sure they would not. They would prefer to learn from our mistakes of the past and usher in a period of peace and prosperity where all communities would feel equal to each other and walk with dignity and pride as children of Mother Lanka. That freedom and equality could dawn only if we shed the false historical perspectives of the past and recognize the intrinsic rights of the people living in the North and the East of Sri Lanka, who are entitled to the right of self-determination as per Article 1 of Chapter one of the International Covenant on Civil and Political Rights in addition to their hereditary and traditional rights to be recognized as a nation.

மாகாணத் தேர்தலில் தொண்டாவின் மகள்?

கொழும்பு, ஓக 26

மாகாண சபைத் தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சார்பில், மத்திய மாகாணத்தில் அறுவர் களமிறங்கவுள்ளனர் என்றும் அவர்களில் இருவர் பெண்கள் என்றும், அந்தக் கட்சியின் உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்றத் தேர்தலில் இ.தொ.காகாவின் சார்பில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களை, மீண்டும் தேர்தலில் களமிறக்குவதா என்பது தொடர்பில் ஆராயப்படுகின்றது.

அத்துடன், அமரர் ஆறுமுகன் தொண்டமானின் புதல்வியான விஜயலக்ஷ்மி மற்றும் இ.தொ.காவின் முக்கியஸ்தர் ஒருவரின் புதல்வியும் இம்முறைத் தேர்தலில் களமிறங்கவுள்ளனர் என்றுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஊவா மாகாண சபைத் தேர்தலில் ஊவா மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் செந்தில் தொண்டமான் களமிறங்கவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள கட்சி யின் ஸ்தாபகத் தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் சிரார்த்த தின நிகழ்வின் பின்னர், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் தெரிவும் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோத மண் அகழ்வை கட்டுப்படுத்தக் கோரிக்கை

நேற்று கவனவீர்ப்புப் போராட்டம்

கிளிநொச்சி, ஓக 26

இரணைமடுக் குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் சட்டவிரோத மண் அகழ்வைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு இரணைமடு விவசாய சம்மேளனம் கோரியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோரி இரணைமடு விவசாய சம்மேளனத்தினால் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது.

கரைச்சி பிரதேச சபை முன்னிருந்து ஆரம்பிக்கப்பட்ட கவனவீர்ப்புப் பேரணி கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு சென்று அங்கு அரச அதிபருக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இரணைமடு குளத்தின் கீழ் உள்ள கனகராயன் ஆற்றுப் படுக்கையில் மிக மோசமான முறையில் மண் அகழ்வு இடம்பெற்று வருவதாகவும் அதனைக் கட்டுப்படுத்துமாறு கோரியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன் செருக்கன் பகுதியில் அமைக்கப்படும் உப்பளத்தின் பணிகளை நிறுத்திச் செய்கை நிலங்களைப் பாதுகாத்து தருமாறும் இந்தப் போராட்டத்தின்போது வலியுறுத்தப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் இரணைமடு விவசாய சம் மேளனத்தின் கீழ் உள்ள கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தொலைபேசி எண்ணை மாற்றத் தேவையில்லை

விரும்பிய வலையமைப்பை மாற்றலாம்

கொழும்பு, ஓக 26

பாவனையாளர்கள் தற்போது உபயோகிக்கும் தொலைபேசி இலக்கங்களை மாற்றாமலேயே, விரும்பிய தொலைபேசி சேவை வழங்குநர்களை மாற்றிக்கொள்ளும் புதிய நடைமுறை குறித்து இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு விவாதித்து வருகின்றது.

சிம் கார்டை மாற்றத் தேவையில்லாமல், நுகர்வோர் தங்களுக்கு விருப்பமான சேவை வழங்குநரைத் தேர்ந்தெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்தது.

இந்த வசதி பல வெளிநாடுகளில் வழங்கப்படுகிறது. இதன்படி, அனைத்து வலையமைப்புக்கான கட்டணத்தையும் சம அளவாக பேணுவது குறித்தும் விவாதிக்கப்பட்டு வருகிறது.

கையடக்கத் தொலைபேசி, நிலையான தொலைபேசி இணைப்புக்கள் இரண்டிற்கும் இந்த வசதி ஏற்படுத்தப்படவுள்ளது.

இது தொடர்பாக சேவை வழங்குநர்களுடனும் கலந்துரையாடலை நடத்துவதாக தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

யாழ். வீதிகளுக்கு சி.சி.ரி.வி.!

யாழ்ப்பாணம், ஓக 26

யாழ். மாநகர சபை, நல்லூர்ப் பிரதேச சபை மற்றும் கோப்பாய் பிரதேச சபைகளுக்கு உட்பட்ட பகுதிகளில் வீதிப்போக்குவரத்து நடைமுறை உள்ள முக்கியமான சந்திகளில் முதற் கட்டமாக 14 சி.சி.ரி.வி. கமெராக்களைப் பொருத்துவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக யாழ். மாநகரமுதல்வர் இம்மானுவேல் ஆனல்ட் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை யாழ். மாநகர சபையின் முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட் தலைமையில் இடம்பெற்றது. இந்த அமர்வில் வீதி விபத்துக்களைக் குறைப்பதற்கான நடவடிக்கை தொடர்பில் கலந்துரையாடப்பட்டபோதே மாநகர முதல்வர் இவ்வாறு கூறினார்.

அண்மைய காலப் பகுதியில் யாழ். குடாநாட்டில் முக்கியமான சந்திகளில் வீதி விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றன. இதனை கட்டுப்படுத்தும் முகமாக வீதிப்போக்குவரத்துப் பொலிஸாரின் ஆலோசனையின் பேரில் இந்த நடவடிகை முன்னெடுக்கப்படவுள்ளதாக முதல்வர் குறிப்பிட்டார்.

2100 இல் இலங்கை சனத்தொகை பாதியாக குறைவடைய வாய்ப்பு

கொழும்பு, ஓக 26

2100 ஆம் ஆண்டளவில் இலங்கையின் மக்கள் தொகை, தற்போதைய மக்கள் தொகையின் அரைவாசியாகக் குறையும் என்று கணிப்பிடப்பட்டுள்ளது. அதாவது இன்னும் 80 ஆண்டுகளில் இந்த மாற்றம் நிகழலாம்.

கருவுறுதல், இறப்புகள், இடம்பெயர்வு மற்றும் மக்கள் தொகையில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பிற காரணிகள் குறித்து நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் அடிப்படையில் "லான்செட்" என்ற முன்னணி பத்திரிகை இந்தக் கணிப்பை வெளியிட்டுள்ளது.

195 நாடுகளின் தரவுகளின் அடிப்படையில் இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின்படி, 2100 ஆம் ஆண்டளவில் இலங்கையின் மக்கள் தொகை 10.45 மில்லியனாகக் குறைவடையுமென கணிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் மக்கள் தொகை 2017 ஆம் ஆண்டில் 21.60 மில்லியனாக இருந்தது, 2031 ஆம் ஆண்டளவில் இலங்கை அதன் அதிகபட்ச மக்கள் தொகையான 22.34 மில்லியனை எட்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டில், ஒரு பெண்ணின் கருவுறுதல் வீதம் 1.80 என்று அறிக்கை மேலும் கூறுகிறது. இது வரும் 80 ஆண்டுகளில் 1.46 என்ற விகிதத்தில் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சுகாதார பரிந்துரைகளின்படி, ஒரு நாட்டின் கருவுறுதல் விகிதம் 2.1 ஐ விடக் குறைவாக இருந்தால், அந்த நாட்டின் மக்கள் தொகை சரிவைக் காணும் என்று நம்பப்படுகிறது.

இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

DAN தமிழ் ஒளி

காலை

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன்
சிவஶ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருதி கோகிலா மகேந்திரன்

7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ

பகல்

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
1.00 மணி : சாட்சியம் (மறு ஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
சந்தானம் மற்றும் ரித்திகா சென் நடிப்பில்
டகால்டி



சண்முகபாண்டியன் மற்றும் நேஹா ஹிங்கெ
நடிப்பில்
சகாப்தம்

திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : டேக் இட் ஈசி
5.00 மணி : அந்த நாலு பேர்
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்

இரவு

7.00 மணி : கொஃபி வித் பிரமுகர்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
10.00 மணி : யாவரும் கேளீர்

DAN COMEDY HD

காலை

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

பகல்

1.00 மணி : நகைச்சுவை மன்னன்
சூரி நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

இரவு

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

DAN தமிழ் HD

காலை

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

பகல்

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டூ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை

இரவு

7.00 மணி : ஓய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

கல்வி tv CHANNEL-1

காலை

5.15 மணி : தரம் 06 - கணிதம்
6.00 மணி : தரம் 07 - கணிதம்
6.45 மணி : தரம் 08 - விஞ்ஞானம்
7.30 மணி : தரம் 09 - விஞ்ஞானம்
8.15 மணி : தரம் 10 - தமிழ்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
அரசியல் விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
கணக்கீடு
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு)
இரசாயனவியல்

பகல்

12.00 மணி : தரம் 10 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 09 - கணிதம்
2.00 மணி : தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் தமிழ்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் வர்த்தகம்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் வரலாறு

இரவு

7.00 மணி : க.பொ.த உயர்தரம் கலைப்பிரிவு
மாதிரி வினாத்தாள்

ஜெயம் தொலைக்காட்சி

காலை

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா - 01
10.00 மணி : புதியதோர் தொடக்கம்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

பகல்

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா - 02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

இரவு

7.00 மணி : அருளுரை
7.30 மணி : திருவாசகம்
08.00 மணி : திருவிழா - 01

CHANNEL HOLY MARY

காலை

7.00 மணி : ஆலயப் பாடலகள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித சூசையப்பர் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை
12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : பாடல்
4.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

Pirai Television

காலை

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

பகல்

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கலீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

இரவு

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.08.2020 அன்று வெளியிடப்பட்டது.